(Under Section 173 BNSS)

FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
~~(குற்ற விசாரணை முறை சட்டம் பிரிவு 154 இன் கீழ்)~~

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8102125

1. District : Tirupathur PS: Year: 2025 FIR No: 03/2025 Date: 22/07/2025
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு முத.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: Vigilance and Anti-corruption Sections பிரிவுகள்:
(ii) Act சட்டம்: the Prevention of corruption Act, 1988 as amended by the PC (Amendment) Act 2018 Sections பிரிவுகள்: 07 of the Prevention of Corruption Act, 1988 as amended by the PC (Amendment) Act 2018
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : Date to :
குற்ற நிகழ்வு நாள் 21.07.2025 நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : Time to :
நேர அளவு 17.50 hrs நேரம் முதல் நேரம் வரை
(b) Information Received at PS. Date : Time :
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 22.07.2025 நேரம் 10.30
(c) General Diary Reference : Entry No(s) Time :
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Vol. II நேரம்

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக - Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் over mobile phone
Beat Number : (b) Address :
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : A.K. Srinivasan (b) Father's/ Husband's Name : G. Arumugam
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : 50 (d) Nationality : indian (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : (g) Address :
தொழில் முகவரி No. 2/258, Janathapuram, Vaniyambadi, Tirupathur District
mobile: 7010116281

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
Tr. Sivakumar, Panchayat Precident, Melsamarg Kuppam village, Ambur Taluk, Tirupathur District

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

Due to complainant

* GCP 240-34(Type-2) 90,000 Cps -21 3 16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

- Separate Sheet Enclosed -

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

A.K. 22/07/2025

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

S. 22/07/2025

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
22/07/2025 at 13.45 Hrs

Name: பெயர் B. Gowri
Rank: நிலை Inspector of police, Vigilance and Anti-Corruption, Tirupathur. No. எண் .....

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)p 2

<u>பணிந்து அனுப்பப்படுகிறது:-</u> இன்று 22.07.2025 ஆம் தேதி காலை 09.30 மணியளவில் நான் நிலைய ஆஜரில் இருந்த போது திரு. A.K.சீனிவாசன், வயது-50 த/பெ G. ஆறுமுகம் எண் 2/358 ஜனதாபுரம், வாணியம்பாடி, திருப்பத்தூர் மாவட்டம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமாக புகாரின் விவரம் பின்வருமாறு:- விடுநர் திரு. A.K.சீனிவாசன், வயது50 த/பெ G. ஆறுமுகம் எண் 2/358 ஜனதாபுரம், வாணியம்பாடி. திருப்பத்தூர் மாவட்டம். கைபேசி எண்-7010116281 பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருப்பத்தூர் மாவட்டம்.ஐயா, நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் ரியல் எஸ்டேட் வியாபாரம் செய்து வருகிறேன். என்னுடைய வீடும் அலுவலகமும் ஒன்றாகவே உள்ளது. கடந்த 15 ஆண்டுகளாக ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன். நான் கடந்த ஆண்டு ஆம்பூர் வட்டம் மேல் சாணங்குப்பம் கிராமத்தில் சுமார் 6.94 ஏக்கர் இடத்தில் ஏ. கே. எஸ் இன் கோல்டன் சிட்டி ரியல் எஸ்டேட் என்ற பெயரில் பிளாட் போட்டு உள்ளேன்.கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் நான் அந்த இடத்தில் இருந்த புதர்களை சுத்தம் செய்தபோது மேல்சாணாங்குப்பம் ஊராட்சி மன்ற தலைவர் திரு.சிவக்குமார் என்பவர் அங்கு வந்து என்னை பார்த்து நான் அப்ரூவல் பண்ணா தான் இங்கே எல்லாமே நீ பாட்டுக்கு உன் இஷ்டத்துக்கு இடத்தை சுத்தம் செஞ்சிட்டு இருக்க என்று சொன்னார். அதற்கு நான் எல்லாத்தையும் சட்டப்படி சரியா செய்கிறேன்னு சொன்னேன். அதற்கு அவர் நான் பஞ்சாயத்தில் தீர்மானம் போட்டு அப்ரூவல் பண்ணாதான் வேலை நடக்கும் பாத்துக்க சாயங்காலம் வந்து என்ன பாரு அப்படின்னு சொன்னார். பின்னர் போனில் என்னிடம் அகமதியா ஹோட்டலுக்கு வர சொன்னார். அங்கு அவர் என்னிடம் பணம் கேட்டார். நான் கடந்த 2024 ஜீன் மாதம் முதல் வாரத்திலேயே திருப்பத்தூர் ஏடி மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்தில் DTCP அப்ரூவலுக்கான அனைத்து ஆவணங்களுடன் மனு கொடுத்தேன். பின்னர் அந்த மாதத்திலேயே 18.06.2024 ஆம் தேதி சிவக்குமார் ஏடி மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்தில் என்னுடைய பிளாட் அப்ரூவல் வேலையை நிறுத்துவதற்காக ஒரு ஆட்சேபணை மனு கொடுத்தார். இது சம்மந்தமாக நான் அவரை போய் பார்த்ததற்கு சிவக்குமார் என்னிடம் என் பக்கத்து லேண்டில் சைட் போட்டுள்ளவர்கள் அப்ரூவலுக்கு ஏக்கருக்கு 2.5 லட்சம் வீதம் சுமார் 6.45 ஏக்கருக்கு 15 லட்சம் கொடுத்துள்ளதாகவும் நானும் அதே போல என்னுடைய 6.94 ஏக்கருக்கு ரூ.15 இலட்சம் பணம் கொடுத்தால் தான் அப்ரூவல் ஆகும் என்றும் இல்லை என்றால் அப்ரூவல் தராதபடி செய்து விடுவேன் என்றும் மிரட்டினார். கடந்த ஆண்டு 18.07.2024 ஆம் தேதி என்னை போனில் அழைத்து வாணியம்பாடி இம்பீரியல் ஷாப்பில் டிடிசிபி அப்ரூவல் வேணும் என்றால் அதற்கு ரூ.15 லட்சம் கொடுத்தால் தான் முடியும் என்றும் இல்லையென்றால் நீ யாரை பார்த்தாலும் வேலை முடியாது கூறினார். நான் அதற்கு என்னுடைய இடமானது டிடிசிபி அப்ரூவல் வாங்க ரூல்ஸ் படி அனைத்தும் சரியாகதான் உள்ளது ஏன்பணம் தரணும் என்று கேட்டேன். அதற்கு அவர் நான் பஞ்சாயத்தில் தீர்மானம் போட்ட பிறகு ஓடிபி என்னுடைய ஐடிக்கு தான் வரும் நான் தான் அதை அப்ரூவல் பண்ணனும் நான் அப்ரூவ் பண்ணாதான் உன் வேலை ஆகும் நீ பணம் கொடுக்கலைன்னா நான் பஞ்சாயத்தில் தீர்மானம் போட்டு OTP யை தந்து அப்ரூவல் செய்யமாட்டேன்னு திரும்பவும் மிரட்டினார். எனக்கு வேறு வழி தெரியாததால் அன்றைய தினம் அதே ஓட்டலில் ரூ.50000/- ரொக்கபணத்தை கையிலும் ரூ.50000/-த்தை என்னுடைய 7010116281 எண்ணிலிருந்து அவர் சொன்ன நம்பருக்கு GPay மூலம் அனுப்பினேன். இதை அட்வான்ஸ் பணமாக வச்சிக்கிறேன் என்று சொல்லிவிட்டு

என்னிடம் பணம் பெற்ற பின்னர் என்னை மிரட்ட வேண்டுமென்று பொய்யாக கொடுத்த ஆட்சேபமனுவை ஏடீ ஆபிஸிலிருந்து 24.7.2024-ம் தேதி அவர் வாபஸ் பெற்றுக் கொண்டார். பின்னர் 31.08.2024 ஆம் தேதி வாணியம்பாடி பைபாஸ் சாலையில் முபாரக் டீக்கடையிடம் திரும்பவும் அவர் என்னிடம் பேசினார். நானும் எவ்வளவோ அவரிடம் கெஞ்சிப் பார்த்தும் அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. பின்னர் கடைசியாக ரூ.12 லட்சம் கொடுத்தால்தான் அப்ரூவல் கொடுப்பேன். அதில் ஏற்கனவோ கொடுத்த ஒரு இலட்சத்தை கழித்துக்கொண்டு 11 இலட்சம் கொடுக்குமாறு கேட்டார். அதை தாண்டி நீ எங்கு சென்றாலும் ஓடிபி என்னிடம் தான் வரவேண்டும்என்று கூறி என்னிடம் பணம் கேட்டு மிரட்டினார். நான் தொடர்ந்து ரியல் எஸ்டேட் தொழில் செய்ய வேண்டும் என்பதால் இது சம்பந்தமாக என்ன செய்வது என்று தெரியாமல் கடைசியாக வேறு வழியில்லாமல் அன்றே அவர் கேட்ட பணத்தில் ரூபாய் 300000/-அவரிடம் கொடுத்தேன். அதில் ரூ.270000/-கையில் பணமாகவும் மீதி ரூபாய் 30 ஆயிரத்தை சந்தோஷ் என்ற பெயருக்கு என்னுடைய கைபேசி எண் 701016281 என்ற நம்பரிலிருந்து GPAY மூலமும் அனுப்பினேன். இதற்கிடையில் டிடிசிபி அப்ரூவல் பெற அனைத்து சாலை பணி, மின்சாரம்,மழைநீர் வடிகால், கழிவு கால்வாய் போன்ற அனைத்து வேலைகளையும் முடித்தும் கடந்த ஓர் ஆண்டாக என்னுடைய DTCP அப்ரூவல் பெண்டிங்கிலேயே இருந்து வந்தது. இது சம்பந்தமாக நான் அனைத்து நபர்களையும் பார்த்தபோதும் என் வேலை நடைபெறவில்லை. கடந்த 11.04.2025 ஆம் தேதி வடசேரியிலிருந்து மேல்சாணாங்குப்பம் செல்லும் வழியில் திரும்பவும் அவர் என்னிடம் பணம் கேட்க நான் வேறு வழி இல்லாமல் மூன்று லட்சத்தை அன்று கொடுத்தேன். இதனிடையில் அலுவலக செலவுக்கென இதுவில்லாமல் என்னிடம் தனியாக ரூ.30000/- பெற்றார். பின்னர் 9.6.2025 ஆம் தேதி அன்று அவர் என்னிடம் மொத்த பணம் 12 லட்சத்தில் 7 லட்சம் வந்து விட்டது மீதி 5 லட்சம் கொடு அப்போதுதான் பஞ்சாயத்தில் தீர்மானம் நிறைவேற்றி தருவேன் என்று கேட்டார். அப்போது அவரிடம் நான் நாளை தருகிறேன் என் வேலையை முடித்து கொடுங்கள் நான் ரொம்ப சிரமப்படுகிறேன் என்று என் நிலையை கூறி கெஞ்சினேன். அதற்கு பணம் எப்போது தருகிறாய் என்று கேட்க நான் வேறு வழி இல்லாமல் நாளை பணம் தருவதாக கூறினேன். அன்றைய தினம் அவர் என்னுடைய இடத்திற்கு மேல்சாணாங்குப்பம் பஞ்சாயத்தில் தீர்மானம் நிறைவேற்றி DTCP அப்ருவல் ஓடீபி வழங்கி விட்டார். நான் அடுத்து 12.6.2025 ஆம் தேதி அவரிடம் மேலும் மூன்று லட்சத்தை கொடுத்தேன். மேலும் அதன் பின்னர் தொடர்ச்சியாக அவர் மீதி பணம் 2 லட்சத்தை கொடுக்குமாறு தொடர்ந்து என்னிடம் போனில் அச்சுறுத்தி வருகிறார். இந்நிலையில் நேற்று 21.07.2025-ம் தேதி எனது போனில் கூப்பிட்டார். நான் கார் ஓட்டிக்கொண்டிருந்ததால் பிறகு கூப்பிடுவதாக கூறி போனை துண்டித்துவிட்டேன். பின்னர் நான் மாலை சுமார் 5.50 மணிக்கு அவருக்கு போன் செய்தபோது சிவக்குமார் என்னிடம் நான் கேட்டபடி மீதி பணம் ரூபாய் இரண்டு லட்சம் கொடுத்தால்தான் உன்னால் அங்கு பிளாட் விற்று தொழில் நடத்த முடியும் இல்லனா நான் அந்த இடத்துல அப்ஜெக்ஷன் போர்டு வச்சி உன் விற்பனையை முடக்கிவிடுவேன் என்றும் மிரட்டுகிறார். அரசாங்கம் நிர்ணயித்துள்ள அனைத்து விதிமுறைகளையும் சரியாக பின்பற்றி அனைத்து வேலைகளையும் செய்து முடித்தும் நான் வேறு வழியில்லாமல் தொழில் செய்யவேண்டும் என்று பயந்து அவர் கேட்ட பணத்தை எல்லாம் கொடுத்து அப்ரூவல் வாங்கி விட்டேன். எனக்கு எங்கு போய் எவ்வாறு புகார் கொடுக்கவேண்டும் என்று தெரியவில்லை, எனக்கு உடல் நலமும்

சரியில்லாமல் இருந்தது. பின்னர் விசாரித்து பார்த்ததில் பஞ்சாயத்து தலைவர் மீதும் புகார் கொடுக்கலாம் என தெரியவந்தது. எனவே, இனிமேலும் இலஞ்சம் கொடுக்க விரும்பவில்லை. எனவே அவர் தற்போது ரூ.2,00,000/-(இரண்டு லஞ்சம்) கேட்பதற்கு உரிய சட்ட நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.இப்படிக்கு, (Sd/- XXXX) A.K.Srinivasan.22.07.2025. இணைப்பு:-1. Town and Country Planning Department (Planning Permission) date-14.10.2024. 2. Layout Application-Final Approval Letter Date-6/11/2025

Madam, Received the compliant on 22.07.2025 at 09.30 Hrs after verifying the antecedents of the accused and credibility of the complainant on 22.07.2025 at 10.30 hrs registered a case in Tirupathur V&A.C. Crime No.03/2025 u/s 7 of the Prevention of Corruption Act-1988 as amended by Prevention of Corruption (Amendment) Act, 2018 (Sd/- XXXX) 22.07.2025 (B.Gowri) Inspector of Police, Vigilance and Anti- Corruption, Tirupathur.

The FIR in original along with the complaint and its enclosures sent to the Hon'ble Principle District Judge cum Special Judge, Tirupathur and sent the other copies to the officers concerned.

22/07/2025

Inspector of Police
Vigilance & Anti-Corruption
Tirupathur